Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 332/2007

Deposition of witness for: PW - 8

| | | | |
|---|---|---|---|
| Name | : செல்வகுமார் | Father/Husband Name | : குருசாமி |
| Age | : | Calling | : |
| Date | : 09.03.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 09 day of 03.2026.

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

எதிரி ஆஜர்

அரசுதரப்பில் முதல்விசாரணை

நான் தமிழ் நாடு காவல் துறையில் பணியாற்றி கடந்த 30.04.2016ம் தேதி மதுரை திருநகர் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து ஒய்வு பெற்று மதுரையில் வசித்து வருகிறேன். கடந்த 01.06.2007ம் தேதி காலை 09.00 மணிக்கு கொட்டாம்பட்டி காவல் நிலையத்தில் பொறுப்பில் இருந்தபோது சொக்கலிங்கபுரம் ஆண்டி என்பவர் மகன் ஆறுமுகம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துபூர்வமான புகாரினை பெற்று புகாரின் தன்மைகேற்ப நிலைய குற்ற எண் 151/2007 பிரிவு 420 இதச கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். ( **அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது** ).

பின்னர் முதல் தகவல் அறிக்கையுடன் புகாரினை இனைத்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தும், ஒரு நகலை எனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டும், அன்றைய தினம் சாட்சிகள் ஆறுமுகம், கணேசன், வெள்ளைக்கண்ணு, விஜயன், சொக்கலிங்கம், சண்முகம், நாகமலை ஆகியோர்களை தனி தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றையதினமே இவ்வழக்கில்

சம்மந்தப்பட்ட எதிரி ரங்கராஜன் என்பவரை காலை 11.00 மணிக்கு நத்தம் பேருந்து நிறுத்தத்தின் முன்பு வைத்து காரணம் கூறி கைது செய்து மதியம் 02.00 மணிக்கு கொட்டாம்பட்டி காவல் நிலையம் கொண்டு வந்து பாரா வசம் ஒப்படைத்தேன். மதியம் 02.30 மணிக்கு தக்க வழிக்காவலும் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். 03.06.2007 ம் தேதி சாட்சிகள் முத்தையாபூசாரி, ஏலம்மாள், குருசாமி, மலையாண்டி, பிச்சை என்பவரது மகன் ஆறுமுகம் ஆகியோர்களை தனி தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். நான் புகார்தாரர் ஆறுமுகத்தை விசாரித்தபோது இவ்வழக்கின் எதிரி 27.02.2006 ம் தேதி தான் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் வேலை வாங்கி தருவதாக செல்லி ஆறுமுகத்திடமிருந்து பெற்ற ரூ.37,000/-யை 3 மாதம் கழித்து 10.06.2007 ம் தேதி ஆறுமுகத்திடம் தருவதாக ஊர் பஞ்சாயத்தார் முன்னிலையில் எழுதி ஒப்புக்கொண்டு கையொப்பம் இட்ட ஆவணத்தை புகார்தாரரிடமிருந்து பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். (**அந்த ஒப்புதல் ஆவணத்தின் சான்றிட்ட நகல் அசாஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது** ), அந்த ஆவணத்தின் அசலை நீதிமன்ற விசாரணையின்போது நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய புகார்தாரர் ஒப்புக்கொண்டு 16.08.2007 ம் தேதி எழுதி கொடுத்த கடிதம். (**அந்த ஒப்புக்கொண்ட கடிதம் அசாஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது** ). இத்துடன் எனது புலன்விசாரணை முடித்து எதிரி மீது பிரிவு 420 இதச ன்கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

எதிரி ஆஜர்

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

சம்பவம் நடந்ததாக சொல்லும் வருடம் 2003 என்றால் சரிதான். என்னிடம் புகார் கொடுத்த வருடம் 2007 என்றால் சரிதான். இவ்வாறு கால தாமதத்திற்கான காரணத்தை குறிப்பிடவில்லை என்றால் புகார்தாரர் அவ்வாறு குறிப்பிட்டு சொல்லவில்லை, எனது விசாரணையில் தான் எதிரியிடம் பணத்தை திருப்பி கேட்ட போது எதிரி தருவதாக சொல்லி காலம் தாழ்த்தியதுதான் காரணம் என குறிப்பிட்டுள்ளார். பட்டியல் சாட்சி 1 முதல் 6 வரையிலானவர்கள் புகார்தாரரின் உறவினர்கள் என்றால் சரிதான். இக்குற்றத்தை நிருபிப்பதற்கு ஆதரமாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

2) எதிரி புகார்தாரரிடமிருந்து ரூ.10,000/-மும் அதை தொடர்ந்து ரூ.27,000/- பெற்றதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த பணம் பரிவர்த்தனை வேலை வாங்கி தருவதாக சொல்லி பெற்ற லஞ்ச பணம் என்றால் சரிதான். லஞ்சம் வாங்குவதும், பெறுவதும் குற்றம் என்றால் சரிதான். அது தொடர்பாக புகார்தாரர் ஆறுமுகத்தின்மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். அசா2 செல்லகண்ணு எனது விசாரணையில் பணம் தொடர்பாக என்ன பேசிக்கொண்டார்கள் என்று தனக்கு தெரியாது என்று சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. அசா2 ரூ.27,000/- கொடுத்தபோது தான் அங்கு இல்லை என்று தனது விசாரணையில் சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. இவ்வழக்கின் புகாரை காவல் நிலையத்தில் உள்ளவர் எழுதினாரா என்றால் சரியல்ல, இவ்வழக்கின் புகார்தாரர்தான் எழுதினார்.

3) அசா3 விஜயன் ரூ.27,000/- அசா1 ஆறுமுகத்தின் வீட்டின் அருகே வைத்து பணத்தை கொடுத்ததாக சொல்லவில்லை என்றால்

சரியல்ல. அசாஆ 4 ஆனது காவல் நிலையத்தில் வைத்து எழுதப்பட்டது என்றால் சரியல்ல. அசா4 நாகமலை, அசா6 மலையான்டி எனது விசாரணையில் எதிரியிடம் அசா1 ரூ.10,000/- ரு.27,000/-மும் கொடுத்த விவரம் நேரடியாக தொியாது என்று சொல்லியுள்ளார் என்றால் அசா1 சொல்லி தனக்கு தெரியும் என்று சொல்லியுள்ளார்கள். சாட்சி முத்தையா பூசாரி வாதியை எதிரிக்கு அருமுகம்படுத்தி வைத்தவர் என்றால் சரிதான். முத்தையா பூசாரி எதிரியிடம் தனக்கு தெரிந்தவருக்கு வேலை வாங்கி தர சொல்லி கேட்டதால்தான் எதிரி அவருக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் நடந்து கொண்டார் என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் எதிரி ஆறுமுகத்திடம் நேடியாக எந்த பணமும் பெறவில்லை என்றாலும், சாட்சி முத்தையா பூசாரி அசா1 னிடம் பெற்ற பணத்திற்கும், எதிரிக்கு எந்த சம்மந்தமும் இல்லை, எதிரி அசா1 னிடம் நேரடியாக எந்த பணமும் பெறவில்லை, எதிரி உயர்நீதிமன்றத்தில் வேலை வாங்கி தரும் அளவிற்கு சமூகத்தில் எந்த அந்தஸ்தும் இல்லை என்றால் சரியல்ல. சாட்சி முத்தையா பூசாரியிடமிருந்து அசா1 கொடுத்த பணத்தை கைப்பற்ற இயலாததனால் எதிரி அரசு ஊழியர் என்பதனால் பணத்தை வசூல் செய்வதற்காக ஆவணங்களை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.